2011 ஜனவரி 11] [திரு. நா. இராமகிருஷ்ணன்]

'சுவாசித்தால் உயிர் வாழலாம், வாசித்தால் மனிதனாகலாம்' என்ற அந்த உயர்ந்த கருத்தின் அடிப்படையில் ஒவ்வொரு ஊராட்சிக்கும் ஒரு நூலகம் என்ற வகையிலே கிராம மக்களின் அறிவு வளர்ச்சிக்காக தமிழ்நாட்டில் மாத்திரம் ஒன்றரை கோடிக்கு மேலான மக்கள் பயன்பெறும் வகையில் கிராமப் பகுதிகளிலே நூலகங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன என்ற செய்தி இன்றைக்கு மக்கள் மத்தியிலே ஒரு இனிப்பான செய்தியாக இருக்கின்றது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

முற்பகல் 11-35

அதைப்போல, நகர்ப்புற உள்ளாட்சி தொடர்பான சாலைகள் அனைத்தையும் மேம்படுத்த வேண்டுமென்று சொல்லி நம்முடைய தலைவர், தன்மானத் தலைவர் அவர்கள் சிறப்பு நிதியாக ரூ.1,05. கோடி ஒதுக்கீடு செய்து, தமிழ்நாட்டிலுள்ள அனைத்து நகராட்சிகளிலும் இன்றைக்குச் சாலைகளை மேம்படுத்துகின்ற பணி விரைவாக நடைபெற்று வருகின்றது.

குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக இராமநாதபுரத்திலே ரூ.616 கோடியில் ஒரு. . . (மணியடிக்கப்பெற்றது)

6. அரசினர் தீர்மானம்

அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் கூட்டத் தொடர் முழுவதும் பேரவைப் பணிகளினின்று நீக்கி வைக்கப்பெற்றதை இரத்து செய்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததற்கிணங்க மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் தீர்மானத்தை மொழியலாம்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "7-1-2011 அன்று மேதகு ஆளுநர் அவர்கள் உரையாற்றியபோது அவையின் நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவித்ததன் காரணமாக, அ.இ.அ.தி.மு.க. கட்சியைச் சார்ந்த திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. கோ. அரி, திரு. கு. பாண்டுரங்கன், திரு. சு.ப. வேலுமணி, திரு. டி. ஜெயக்குமார், திரு. எல். ரவிச்சந்திரன், திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, திரு. வே. செந்தில் பாலாஜி மற்றும் திரு. சி.வி. சண்முகம் ஆகிய 9 உறுப்பினர்களையும் 10-1-2011 அன்று பேரவையில் நிறைவேற்றப்பட்ட

தீர்மானத்தின்படி இந்த அவையிலிருந்தும், சட்டப் பேரவை உறுப்பினர்களின் உரிமை செயல்பாடுகள் அனைத்திலிருந்தும் இந்தக் கூட்டத் தொடர் முழுவதும் இப்பேரவை நீக்கியது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பெருந்தன்மையுடன் பரிந்துரைத்த கருத்திற்கிணங்க, பேரவை நடவடிக்கைகளிலிருந்து நீக்கிவைக்கப்பட்ட அ.இ.அ.தி.மு.க. கட்சியைச் சேர்ந்த 9 உறுப்பினர்களும் 12-1-2011 புதன்கிழமை முதல் பேரவை நடவடிக்கைகளில் கலந்துகொள்ளலாம்" என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

10-1-2011 அன்று வழங்கப்பட்ட தண்டனை குறைக்கப்பட்டு கீழ்க்காணும் அ.இ.அ.தி.மு.க. கட்சி உறுப்பினர்கள் திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. கோ. அரி, திரு. கு. பாண்டுரங்கன், திரு. சு.ப. வேலுமணி, திரு. டி. ஜெயக்குமார், திரு. எஸ். ரவிச்சந்திரன், திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, திரு. வே. செந்தில் பாலாஜி மற்றும் திரு. சி.வி. சண்முகம் ஆகியோர் 12-1-2011 முதல் அவைக்கு வரலாம் என்று ஆணையிடுகிறேன்.

5. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன், பேசுங்கள்.

திரு. நா. இராமகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம், வேலூர் மாநகராட்சியிலே 25 இலட்சம் மக்கள் பயன்பெறுகின்ற வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்; மீஞ்சூரில் ஒரு நாளைக்கு 100 மில்லியன்